நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42-ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No.291/2025

## P.W.4 -ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | நாச்சிமுத்து |
| தந்தை / கணவர் பெயர் | : | ரத்தினம் |
| கிராமம் | : | மேட்டூர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW4** |
| வயது | : | 46 |

*1969-ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969-ஆம் வருடத்திய 44-வது மத்திய சட்டம் )-ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026-ஆம் வருடம்,ஏப்ரல் மாதம், 15-ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர். ( கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் இன்று ஆஜரில் இல்லாததாலும் சாட்சி மற்றும் தரப்பினர்கள் ஆஜரில் இருப்பதை கருத்தில் கொண்டும் மேற்படி சாட்சியை விசாரணை செய்யாமல் திருப்பி அனுப்புவது வழக்கு விசாரணையில் தொய்வு ஏற்படுத்தும் என்பதாலும் நீதியின் நலன் கருதி இந்நீதிமன்றம் தாமாக சாட்சியை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்கிறது.)**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:- 03.35 PM

1. நான் தற்போது மேட்டுரில் குடியிருக்கிறேன். நான் மேட்டுர் பேருந்து நிலையம் அருகில் பூக்கடை வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.1 சரோஜாவை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியையும் எனக்கு தெரியாது. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. யாருக்கு அடிப்பட்டது என்று தெரியாது. விபத்திற்கு யார் காரணம் என்று தெரியாது. போலீசார் என்னிடம் ஒரு கையெழுத்து கேட்டார்கள். கையெழுத்து செய்தேன். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். ( **பார்வை மகசரிலுள்ள 2 வது கையெழுத்து அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை அவசியம் இல்லையென தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 03.45 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**

**நீதித்துறை நடுவர் எண்.1, மேட்டுர்**